

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், வணிக வரித்துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதியதாகக் கட்டப்படவுள்ள பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு 13.02.2025 அன்று அடிக்கல் நாட்டி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், தொங்குட்டிபாளையம் கிராமத்தில் அலகுமலை ஜல்லிக்கட்டுப் போட்டியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் கொடியசைத்து துவக்கி வைத்து பார்வையிட்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், ஜல்லிக்கட்டு காளைகள் நல சங்க நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ஜெயங்கொண்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார்!

அரியலூர், பிப். 19 -

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஜெயங்கொண்டம் ஒன்றிய அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இருவண்ணக் கொடியை அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஏற்றி வைத்தார்.

உடன் கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் தனசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பி னர் எம்.பி.பால சுப்பிரமணியன், நகர செயலாளர் வெ. கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர் ப.கோபால கிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்தி ரன், பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, ஆர்.எம். அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க. இராமகிருஷ்ணன்,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் க.செல்வராஜ், ஒன்றிய அவைத் தலைவர் இரா. குணசேகரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் கண்ணன், என்.செந்தில்ராஜன், சரண்யாவேல்முருகன், ஞானசேகரன், குணசேகரன், மாவட்ட பிரதிநிதி பி.எஸ். ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜசேகர், க.தங்கராசு கி.துருவேந்தன் மாவட்ட பிரதிநிதி சேகர் தொ.மு.ச

மண்டலதலைவர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகளும் அனைத்துஅணி பொறுப்பாளர்களும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளும், கழக முன்னோடிகளும், திரளாக கலந்து கொண்டனர்.




தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், த.செல்வம், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகரச் செயலாளர் சண். இராமநாதன், மாநில நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர், பிப்.19 -

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்நாளை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் ஈரோடு கிழக்கு தகுதி இடைதேர்தலில் கழக வேட்பாளரின் வெற்றிக்கு அரும்பாடுபட்ட தமிழ்நாடு முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றம்.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், தஞ்சை மத்திய மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், ச.முரசொலி எம்.பி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, புண்ணிய மூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், த. செல்வம், கே.டி.மகேஸ்கிருஸ்ணசாமி, மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாநில நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்.

2025 மார்ச் 1ல் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றியம், மற்றும் பேரூர் கழகங்களின் சார்பாக 2025 மார்ச் மாதம் முழுவதும் ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், பார்வையற்றோர், காது கேளாதவர் விடுதி மாணவ, மாணவிகளுக்கு தினந்தோறும் அறுசுவை உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும், திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி, தலைவரின் பிறந்த நாள் கொண்டாடுவது,

2025-2026 நிதிநிலை விளக்க தெருமுனை கூட்டங்கள் நடத்தியும் கழக கொடி ஏற்றியும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவது என இக்கூட்டத்தின் சார்பில் வேண்டிக்கொள்கிறோம்.

ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் 2025-2026 ல் தமிழ்நாட்டுக்கு எந்த நிதியையும் ஒதுக்காமல் தமிழக மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.கவின் மதவாத ஆட்சியை வண்மையாக கண்டிக்கின்றோம்

பள்ளி கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய 2152 கோடி நிதியை வழங்காமல், தமிழக மாணவர்களின் கல்வி மேம்பாட்டை தடுக்கின்ற வகையில் செயல்படும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசை கண்டிக்கின்றோம்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியை போற்றுக்கின்ற வகையிலும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 க்கு அதிகமான இடங்களில் வெற்றியை உறுதி செய்யும் வகையிலும் மாபெரும் வெற்றியைத் தேடித்தந்த ஈரோடு கிழக்கு தொகுதி மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது. வெற்றியை தேடித் தந்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும். துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# எருக்கஞ்சேரி கலசாத்தம்மன் திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, பிப்.19 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (17.02.2025) சென்னை, எருக்கஞ்சேரி கலசாத்தம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னை, எருக்கஞ்சேரியில் அமைந்துள்ள அருள்மிகு கலசாத்தம்மன் திருக்கோயிலுக்கு கடந்த 2010 ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற நிலையில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாலாலயம் செய்யப்பட்டு, உபயதாரர் நிதி ரூ.4.90 இலட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, இன்று அத்திருக்கோயிலுக்கு வெகுவிமரிசையாக நடைபெற்ற குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் நேதாஜி உ.கணேசன், மாநகராட்சி உறுப்பினர் மலைச்சாமி, திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி நித்யகலா, இறையன்பர்கள் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-02-2025



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.என்.எம்.உபயதுல்லா
### பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வந்தவர்.

2020–ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.